தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மே 8, வெள்ளிக்கிழமை.

சித்திரை 25, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்''.

சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக் களத்தின் தன்மை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவில் நிலங்களுக்கு வரி விலக்கு.

(*627—வினா எண் 2595)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவில் நிலங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கும் சட்டம் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சட்டம் தற்போது இயற்றப்பட உத்தேசமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நிலங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கும் சட்டம் தற்போது இயற்ற முடியாவிட்டாலும், கோவில்கள் இப்போது வருமானம் இல்லாமல் இருக்கின்றன. அதன் நிலங்களைக் குத்தகைக்குப் பயிர் செய்கிறார்கள். அந்தக் குத்தகைதாரர்கள் ஒழுங்காகக் குத்தகை கொடுப்பது கிடையாது. கோவில்களுக்கு வருமானம் இல்லாத காரணத்தால், குத்தகைதாரர்களிடமே அந்த நிலங்களுக்கு வரி வசூலிக்க அரசு தனி முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தேவஸ்தானங்களுக்கு குத்தகைக்காரர்கள் கொடுக்க வேண்டிய பாக்கியைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். இந்த பாக்கியை வசூல் செய்ய அரசு சட்டங்கள், மாரட்டோரியம் சட்டங்கள் அமுல் செய்யப்பட எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் தடைகள்தொடர்ந்து இருந்து வருகின்றன. ஆகவே, தேவஸ்தானங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த முடியவில்லை. வருவாய் ஆய்வாளர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை, தேவஸ்தானங்களிடம் வசூலிக்க நடவடிக்கை எடுத்து சில தேவஸ்தானங்கள் உயர்நீதிமன்றங்களில் ரிட் மனு கொடுத்து, தடையாணை பெற்றுள்ளன. இவ்வழக்குகள் நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளன. மேலும், இக்கேள்வி எந்த வரியிலிருந்து கோவில் நிலங்களுக்கு விலக்கு அளிப்பது என்று குறிப்பிட்டு தெளிவாக இல்லை. ஆனாலுங்கூட, இப்பொழுது குத்தகைக்காரர்கள் தங்களுக்குக் குத்தகை பாக்கியைச் செலுத்தாத காரணத்தால் வரி செலுத்துவதற்கில்லையென்று குறிப்பிட்டு, தேவஸ்தானங்கள் ரிட் மனு போட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசுக்கு வர வேண்டிய பணத்தை அந்தக் கோவில்கள் இன்னும் செலுத்தவில்லை. இந்த நிலையில்தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கோவில்கள் எவ்வளவு வரி பாக்கி வைத்திருக்கின்றன? தமிழ் நாட்டில் எத்தனை ஏக்கர் நஞ்சை நிலம் கோவில்களுக்கு இருக்கின்றன? புஞ்சை நிலம் எவ்வளவு இருக்கிறது? எவ்வளவு ரூபாய் வர வேண்டியிருக்கிறது? கோவில்கள் அரசுக்கு வரி கட்டாவிட்டால், அந்த நிலங்களையோ அல்லது கோவில்களையோ ஜப்தி செய்யக் கூடிய நிலை ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள், குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு திருக்கோவிலிலும் வருகின்ற வருமானத்தில் 40 சதவிகிதத்திற்கு மேற்படாத தொகையை அங்கே பணிபுரிகின்ற பணியாளர்களுக்குக் கொடுக்க விதியிருக்கிறது. ஆனால், இன்றைக்குக் குத்தகைக்காரர்கள், அவர்களுடைய குத்தகை பாக்கியைக் கொடுக்காத காரணத்தால், ஆலயங்களுடைய வருமானம் குறைந்து இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் இந்த வரியைக் கட்ட வேண்டிய நிலைமையிருக்கும்போது, மிகுந்த பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஒரு சில திருக்கோவில்கள் மட்டும் தான் நீதிமன்றத்திற்குச் சென்று ரிட் பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ரிட் பெட்டிஷன்களுடைய முடிவு வருகிறவரை எல்லா திருக்கோவில்களும் நிலவரி கொடுக்க வேண்டாம் என்று அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கொடுக்க வேண்டாம் என்று முடிவெடுக்க முடியாது. ஆனால் கோவில்கள் மட்டுமல்ல, வரி செலுத்த வேண்டுமென்ற விதிமுறை இருக்கிற பொழுது, அந்த விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டிய விதத்திலேதான் அவ ரவர்கள் இருக்கிறார்கள். வருமானத்தைத் திரட்டுவது எப்படி என்றும் வரி வசூலிப்பதற்கான வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வது எப்படி என்பதையும்தான் அந்த, அந்த நிறுவனங்கள் தனியாகக் கவனிக்க வேண்டும். வரியினுடைய அளவும் மிகமிகக் குறைவுதான். ஆனாலுங்கூட, அந்தக் குத்தகைகாரர்களிடமிருந்து பாக்கியைப் பெறுவதற்கான முயற்சிகளிலே அவர்கள் முறைப்படி ஈடுபடுவதுதான் முறையாக இருக்கும்.

உச்ச வரம்பு சட்டம்.

628—(*வினா எண். 2846) திரு. எம். செல்லமுத்து, மற்றும் **திரு. கோ. வீரய்யன் ;** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உச்ச வரம்பு சட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள நிலம், விநியோகிக்கப்பட்ட நிலம்—விநியோகிக்கப்பட்டவருக்கு ஒப்ப டைக்காமல் உள்ளதா ?

(அ) ஆம் எனில், அப்படி எத்தனை வழக்குகள் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 31-3-1987 முடிய இச்சட்டத்தின் கீழ் 1,66,757 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு 1,24,275 ஏக்கர் விநியோகிக்கப்பட்டது. நிலம் விநியோகிக்கப் பட்டவருக்கு ஒப்புவிக்கப்படாதது சம்பந்தமாக நிலத்திற்கு 407 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்படைக்கப்பட்ட நிலம் சம்பந்தமாக, ஒப்படைப்பு கொடுத்தும் நிலத்தை அனுபவிக்க முடியாத நிலையில் 407 வழக்குகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்த 407 வழக்கு களிலே எவ்வளவு விவசாயிகள் வருகிறார்கள்? அதற்குட்பட்டு எவ்வளவு நிலம் வருகிறது? அதைத் துரிதமாக அவர்கள் பெறு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பில் தடையாணையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பரப்பு 26,804 ஏக்கர் ஆகும். உபரி நில விநியோக விதி 13-ன் கீழ் இருப்பது 9,976 ஏக்கர் ஆகும். தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டது, 4,041 ஏக்கர் ஆகும். ஒப்படை நடவடிக்கையில் உள்ள ஏக்கர் 1,661 ஏக்கர். ஆனால் விநியோகிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 97,785. விநியோ